உ

ஓம் சக்தி துணை

# துர்க்கா மஞ்சரி


"முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருதீங்கில்லை"

விக்கிரம வருடம் ஆனி 32  வள்ளுவர் ஆண்டு 2031 (15-07-2000)

மலர்: 1  இதழ்: 2



**7468 EDMONDS STREET, BURNABY, B.C. V3N 1B2.   TEL: (604) 521-3472**



ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

சிவமயம்



வன்கூவர் வாழ் தமிழ் மக்களுக்கு எமது வணக்கங்கள்.

எமது அன்புக்குரிய வன்கூவர் அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்த்தான அடியவர்கள் துர்க்கா மஞ்சரி என்னும் ஆன்மீக மலரை வெளியிடுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்த்தானப் பணிகளை நல்ல முறையில் செய்வதோடு சமய அறிவு வளர்ச்சிக்காக இம் மலரையும் வெளியிடும் தேவஸ்த்தான நிர்வாக சபையினரின் சேவையை நாம் பாராட்டுகிறோம்.

உலகின் மிகப் பழமை வாய்ந்த எமது சமயத்தை இளைய தலை முறையினர் நல்ல முறையில் கற்றுப் பெருமையுடன் வாழ இம் மலர் உதவ வேண்டும் என நாம் விரும்புகிறோம். ஓம் சாந்தி.

இவ்வுலகிலும் அகவுலகங்களில் இருந்தும் அன்பும் ஆசிகளும்.

குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகள்
குருமகா சன்னிதானம், குவை சைவ ஆதீனம்
ஹாவாய், ஐக்கிய அமெரிக்கா

28 . 4 . 2000

शिवः सर्वगतं प्रेम परं सत्यं परः शिवः அன்பே சிவமயம் சத்தியமே பரசிவம்


**Satguru Sivaya Subramuniyaswami**

Founder-Publisher of HINDUISM TODAY

Kauai's Hindu Monastery • 107 Kaholalele Road, Kapaa, Hawaii USA 96746-9304
Phone: 1-808-822-3012 Fax: 822-4351 • Internet: Gurudeva@HinduismToday.kauai.hi.us
Meet us on the World Wide Web: • http://www.HinduismToday.kauai.hi.us/ashram/Gurudeva.html

# ஆலயமும் நாமும்

அம்பிகை அடியார்களே

இந்த ஆண்டில் மலரும் இந்த இரண்டாவது இதழ் மூலம் எமது ஆலய திருப்பணி முயற்சிகளையும் சில ஆன்மீக ஆக்கங்களையம் தங்களுடன் பகிர்ந்து கொள்ளுவதில் பெருமகிழ்சியடைகிறோம். எமது ஆலயத்தின் வளர்சியில் பெரிதும் உறுதுணையாக இருந்து வரும் மாமுனிவர் எங்கள் குலகுருவான சிவாயசுப்பிரமுனிய சுவாமிகள் வருகையை முன்னிட்டு இந்த இதழை சிறப்பிதழாக உங்கள் கரங்களில் சமாப்பிக்கிறோம்.

இவ்விதழ் சுவாமிகளின் ஆசியுரையடன் ஆரம்பமாகி சிந்தனைக்கு சிலவரிகள் மற்றும் சமய ஆய்வுகளுடன் இன்னும் பல விடயங்களை உங்களுக்கு தருகிறது. துர்கா மஞ்சரியின் வளர்சிக்கு வேண்டிய ஆக்கங்களையும் கருத்துக்களையும் தரவிரும்பும் அடியார்கள் எம்முடன் தொடர்புகொன்டு தங்களது ஆக்கங்களை கொடுத்து மஞ்சரியின் வளர்சிக்கு உதவும்படி கேட்டுகொள்ளுகிறோம்.

ஓர் ஆலயமானது தனிய வழிபாட்டுடன் மட்டும் நின்றுவிடாது ஒரு சமூகத்தின் ஒருமைப்பாட்டைபேணி வளாப்பதற்கும் எதிர்கால சந்ததியினரை ஒழுக்கமுள்ளவர்களாக வளாப்பதற்கும் உதவுகிறது. துர்க்கை அம்மன் ஆலயத்திலும் நாம் இவற்றை கருத்திற் கொண்டு பஜனைகள் சமயவகுப்புக்கள் யோகவகுப்புக்கள் என்பன ஒழுங்கு செய்திருக்கிறோம். அது மட்டுமல்ல இம்முறை ஆலயத்தின் வருடாந்த திருவிழா பொது மக்கள் எல்லோரும் பங்கு பற்றும் விதத்தில் மக்கள் தங்கள் உறவினருடனோ நண்பர்களுடன் சேர்ந்தோ அல்லது ஒரு குழுவாகவோ சேர்ந்தோ பத்து திருவிழாக்களையும் வெகுசிறப்பாக செய்ய தங்கள் பங்களிப்பினை வேண்டிக்கொள்ளுகிறோம். இவற்றில் பங்கு பற்றும் அடியார்கள் ஆலய நிர்வாகத்துடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்.

இது உங்கள் ஆலயம் உங்கள் ஆலயத்தின் வளர்ச்சியிலும் அதன் சகல நடவடிக்கைகளிலும் முயற்சிகளிலும் உங்கள் பங்களிப்புக்கள் அவசியம் என்பதை சொல்ல வேண்டிய அவசியமில்லை. இன்றுவரை 150 அடியார்கள் அங்கத்தவர்களாக சேர்ந்திருக்கிறார்கள். நாம் இந்த ஆலயகட்டிடத்தை வாங்கும் போது தனியாரிடமும் வங்கியிலும் கடன் பட்டுத்துதான் வாங்கினோம் என்பது அடியார்களாகிய உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆகவே அன்பர்களே காணிப்பங்கு வாங்காதவர்கள் வாஙகுவதன் மூலமும் பங்குகளை வாங்கி பணம் செலுத்தாதவர்கள் தயவு செய்து பணத்தை செலுத்துவதன் மூலமும் இன்னும் அங்கத்தவராக சேராதவர்கள் அங்கத்தவர்களாக சேருவதன் மூலமும் மக்கள் ஆலயமான தங்கள் ஆலய வளர்சிக்கு உதவி அருட்பெருங்கடலான அன்னை துர்கா தேவியின் பேரருள் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

நிர்வாக சபை

உ
சிவமயம்

# "உள்ளம் என்னும் கோயிலிலே....."

விண்ணிலும் மண்ணிலும் இன்று விஞ்ஞான வளர்ச்சியினால் விந்தைகள் புரியும் மனிதனே ஆண்டவனின் படைப்புக்களில் அற்புதமான படைப்பாகும். மனிதனுக்கு ஆறாம் அறிவை ஆண்டவன் அளித்தது, அவனது ஆன்ம ஈடேற்றத்திற்கும், மெய்ஞானத்தை உணர்வதற்குமே என்பதை மறந்து, ஐம்புலன்களின் ஆசைகளுக்கு அடிமையாகி வாழ்க்கைச் சாகரத்தில் மூழ்கித் தத்தளித்துத் தடுமாறுகிறான். மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்று ஆசை வட்டத்திற்குள் அலைந்து, அவற்றை அடையவும், அடைந்த பின்பும் கூட பாவக்குழியில் வீழ்ந்து, மனநிம்மதி இழந்து, அமைதியைத் தேடி அலைகிறான். ஏங்கி நிற்கிறான். எந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் மனிதவாழ்வு துன்பமயமாகவே காட்சியளிக்கிறது. துன்பங்களினால் துடிக்கும் மனிதன் அமைதியைத் தேடி ஆண்டவனிடம் அடைக்கலம் தேடுகிறான். ஆலயத்தை நாடுகிறான்.

அங்கிங்கெனாதபடி எங்கும் எதிலும் நிறைந்து விளங்கும் எல்லையற்ற பரம்பொருளான இறைவன், ஞானிகள், முனிவர்களின் திருவுள்ளங்களிலும், உருவத் திருமேனிகொண்டு ஆலயங்களிலும் எழுந்தருளி, உள்ளன்புடன் கண்ணீர் மல்கி வழிபடும் அடியார்களுக்கு நன்னெறி காட்டி, அருள் செய்து ஆட்கொள்கிறான். பாலில் நெய்போல, நிலத்தின் அடியில் நிறைந்திருக்கும் மறைந்திருக்கும் நீர்போல, எங்கும் இறைவன் நீக்கமற நிறைந்திருந்தாலும், பசுவின் உடலில் பிறக்கும் பாலானது அதன் முலைகளில் மட்டுமே சுரப்பது போலவே, இறைவனின் திருவருள் ஒருமுகப்படுத்தப்பட்டு, வெளிப்படும் இடமே ஆலயமாகும். ஆன்மா ஆண்டவனிடத்தில் லயப்படும் புனிதமான இடம் என்பதுதான் ஆலயம் என்பதன் பொருளாகும்.

ஆலயங்கள் என்பவை மக்கள் தத்தமது அறிவு நிலைக்கேற்ப வழிபடும் இடங்களாக மட்டுமன்றி, மனிதசமுதாயத்தை வளம்படுத்தி, ஆன்மீக உணர்வை வளர்த்து, இம்மைக்கும் மறுமைக்கும் ஈடேற்றம் தந்து, மக்களின் கலை, கலாச்சார, பாரம்பரிய, பண்பாடுகளை பேணி வளர்க்கும் கருவூலங்களாகவும், மனிதகுலத்தின் மேம்பாட்டிற்கான கலங்கரை விளக்கங்களாகவும் திகழ்கின்றன. இதனால்தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்" என்று சொல்லிவைத்த நமது மூதாதையர்கள் தாங்கள் வாழ்ந்த இடங்களிலெல்லாம் ஆலயங்களை அமைத்து வாழ்ந்தார்கள். அந்த வகையில் எங்களுக்கு வட அமெரிக்காவில் கனடாவின் வன்கூவர் – பேர்னபியில் அருளாட்சி செய்யும் அன்னை துர்க்கையின் ஆலயம் அமைந்தது, நாம் அனைவரும் செய்த பூர்வ புண்ணியத்தின் பலனேயாகும்.

மனிதனின் உள்ளம் என்ற கோயிலிலே இருக்கும் இறைவனை மனிதன் உணரவேண்டும். தனக்குள்ளே இருக்கும் இறைவனை தான் கண்டுகொள்வதற்கான ஆரம்ப நிலைப் பயிற்சிக் கூடங்கள், படிக்கட்டுக்கள் தான் உருவவழிபாட்டினை தருகின்ற ஆலயங்களாகும். தோத்திரப்பாடல்கள், பண்ணிசைகள், வேதமந்திரஒலிகள், நறுமணம் கமழும் மலர்கள், தீப ஆராதனைகள், பயபக்தியோடு கூடிய ஆலயக்குருக்களின் பூசைகள் தூய்மையற்ற மனதையும் தூய்மையாக்கி, பக்தி

எழுச்சியை உண்டாக்கி, தெய்வீகச் சூழலிலே ஆன்மாவை இறைவனிலே லயப்படவைக்கும். அருள் மழைபொழியும் ஆலயங்களே ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிவகுக்கும்.

அறம்செய்து, ஆலயத்திருத்தொண்டுகள் செய்து இப்பிறவி எடுத்த பயனை நாம் அடையவேண்டும். "அவனருளாலே அவன்தாழ் பணிந்து" என்று பாடினார் மணிவாசகர். ஆண்டவனை வணங்குதற்கே அவனருள் வேண்டும் என்றால், அந்த அருள்பொழியும் ஆண்டவனுக்கு ஆலயம் அமைத்து, திருத்தொண்டுகள் செய்து, அதன் நாளாந்த இயக்கத்தில் பங்குகொள்ளும் அடியார்கள் அவனருள் பெற்ற பெரும் பாக்கியசாலிகள் என்பதில் ஐயம் ஏதும் இல்லை.

மனம், வாக்கு(சொல்), காயம்(உடல்) என்ற மூவகையிலும் மிகவும் இதயசுத்தியோடு செய்யப்படும் திருத்தொண்டுகளையே இறைவன் ஏற்கிறான். பொறாமை, ஆசை, சினம், கடும்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் இடம் கொடுக்காமல் "மனத்துக்கண் மாசிலனாகி" திருத்தொண்டு செய்வதும், அறநெறியில் வாழ்வதுமே இப்பிறவியின் பயனாகும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். எமது மனதில் இருக்கும் ஆண்டவனை எமக்குள்ளே இருக்கும் ஆணவம் என்ற திரைதான் மறைக்கிறது. ஆலயங்களில் ஆண்டவனின் திருவுருவங்களுக்கு முன்னால் திரைச்சீலை தொங்கவிட்டிருப்பதும், அதை விலக்கியதும் தெய்வத்தின் திருக்கோலக் காட்சி கிடைப்பதும் இத்தத்துவத்தை வெளிப்படுத்தவேயாகும்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்ற வள்ளுவன் வாக்கிற்கமைய, "அன்பே சிவம், "அன்பும் சிவமும் ஒன்றே" என்பதுணர்ந்து, நல்லதையே நினைத்து, நல்லதையே செய்து, ஆன்மீக வழியில் நின்று, எல்லா மக்களுமே ஆண்டவனின் குழந்தைகள் என்ற உணர்வோடு, ஆண்டவன் சந்நிதியில் அவன் நாமத்தையும், அவன் புகழையும் தவிர வேறு எதுவும் பேசாதவர்களாக, ஆலயத் திருப்பணிகளில் எமது சக்திக்கு இயன்றவரை சகல வழிகளிலும் பங்குகொண்டு, பரம்பொருளின் பாதாரவிந்தங்களை எங்கள் உள்ளம் என்ற ஆலயத்தில் பதியச்செய்து இந்த மானிடப் பிறவியின் பயனைப் பெறுவோமாக. அந்த நிலைக்கு நாம் உயர, எங்கள் ஆலயங்கள் எங்கள் ஆன்மீக வாழ்விற்கு அடித்தளங்களாக அமைய, அனைவருக்கும் ஆண்டவனின் அருள் கிட்டப் பிரார்த்திப்போமாக.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" - திருக்குறள்.

திருச்சிற்றம்பலம்

க. நடராஜா

# சிந்தனைக்கு சில வரிகள்...

## உறவு

ஆயிரம் வாசல் இதயம். யாரோ வருகிறார்கள். யாரோ போகிறார்கள். வாழ்ந்தால் சிரிக்கிறார்கள். வறண்டால் ஒதுங்குகிறார்கள். இரண்டு ஆன்மாக்கள் ஐக்கியமாகி, ஒரு ஆன்மா தாக்கப்படும்போது இன்னொரு ஆன்மாவும் இயற்கையாகத் துடிக்குமேயானால் அந்த உறவே புனிதமான உறவாகும். எந்தப் பந்தம் ஏற்றத் தாழ்வுகளில் சேர்ந்து வருகிறதோ அங்கேதான் உறவு இருக்கிறது.

## ஆசை

ஆசையிலும் நம்பிக்கையிலுமே வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கிறது. சராசரி மனிதனை ஆசைதான் இழுத்துச் செல்கிறது. அவன் தவறுக்கெல்லாம் அதுவே காரணமாகிறது. எந்தக் கட்டத்திலும் ஆசை பூர்த்தியடையவில்லை. தவறுகளின் மூலமே மனிதன் உண்மையை உணர்ந்து கொள்ளவேண்டும் என்பதற்காக இறைவன் ஆசையை தூண்டிவிடுகிறான். பொறாமை, கோபம் எல்லாமே ஆசை பெற்றெடுத்த குழந்தைகள்தான்.

## நன்மை, தீமைகள்

நீ செய்யும் நன்மை தீமைகள், அதே அளவில் அதே நிலையில் உன் ஆயுட்காலத்திலேயே உன்னிடம் திரும்பி விடுகின்றன. அந்த அளவு கூடுவதும் இல்லை குறைவதும் இல்லை. ஒருவனை எந்த வார்த்தை சொல்லி நீ திட்டுகிறாயோ, அதே வார்த்தையால் எப்போதாவது ஒருமுறை நீ திட்டப்படுகிறாய். எப்படித் தீர்க்க நினைக்கிறீர்களோ அப்படியே தீர்க்கப்படுவீர்கள் என்கிறது கிறீஸ்தவ வேதம்.

எந்த அயோக்கியனும் நிம்மதியாக செத்து, அவனுடைய குடும்பம் நிம்மதியாக வாழ்ந்ததாக வரலாறே இல்லை. அயோக்கியனின் குடும்பம் ஏழேழு தலைமுறைக்கும் அவன் செய்த பாவத்தின் பலனை அனுபவித்தே தீரும்.

நன்றி: அர்த்தமுள்ள இந்துமதம்

## "ஏழு நற்குணங்கள்"

ஏழ்மையிலும் நேர்மை
கோபத்திலும் பொறுமை
தோல்வியிலும் விடாமுயற்சி
வறுமையிலும் பரோபகாரம்
துன்பத்திலும் தைரியம்
செல்வத்திலும் எழிமை
பதவியிலும் பணிவு.

அன்பு காட்டுங்கள் – ஆனால் அடிமையாகாதீர்கள்.
இரக்கம் காட்டுங்கள் – ஆனால் ஏமாந்து போகாதீர்கள்.
பணிவாய் இருங்கள் – ஆனால் கோழையாகாதீர்கள்.
கண்டிப்பாய் இருங்கள் – ஆனால் கோபப்படாதீர்கள்.
சிக்கனமாய் இருங்கள் – ஆனால் கஞ்சனாய் இராதீர்கள்.
வீரனாய் இருங்கள் – ஆனால் போக்கிரியாய் இராதீர்கள்.
சுறுசுறுப்பாய் இருங்கள் – ஆனால் பதட்டப்படாதீர்கள்.
தர்மம் செய்யுங்கள் – ஆனால் ஆண்டியாகிவிடாதீர்கள்.
பொருளைத் தேடுங்கள் – ஆனால் பேராசைப்படாதீர்கள்.
உழைப்பை நாடுங்கள் – ஆனால் கடவுளை மறந்துவிடாதீர்கள்.

## நால்வகைப் புத்திரர்கள்

1. நயாஸ புத்திரர்கள் – பெற்றோருக்குத் தாங்கள் பட்ட கடனைத் தீர்க்கப் பிறப்பவர்கள்.
2. குணபுத்திரர்கள்– பெற்றோர்கள் பட்ட கடனைத் தீர்த்துக்கொள்வதற்காகப் பிறப்பவர்கள்.
3. சூ புத்திரர்கள் – தெய்வானுக்கிரகத்தால் பிறக்கும் புத்திரர்கள்.
4. கு புத்திரர்கள் – புலன் இன்ப வேகத்தால் விளையும் புத்திரர்.

✸ (உபேஷா புத்திரர்) — தெய்வம் மானிடனாக மாறி வந்து வாய்க்கும் புத்திரர்.

ஒழுக்கமே உயர்ந்த அழகு. கஷ்டங்களைத் தாங்கிக் கொண்டு ஊக்கத்துடன் உழைத்தலே வாழ்வு — என்னும் இரு அரிய உண்மைகளை உணர்வது நல்லது. ஆன்மீகப் பற்றுக்கொண்டு, அதன் உதவியுடன், பொறாமை, கோபம் முதலியவற்றை ஒழியுங்கள். இவற்றைச் செய்தால், வாழ்க்கைச் சவால்களை வெல்ல முடியும்.

## நவரசம்

1. சிருங்காரம்
2. அற்புதம்
3. சாந்தம்
4. கருணை
5. நகைச்சுவை
6. வீரம்
7. பயம்
8. ரௌத்ரம்
9. வெறுப்பு

தொகுப்பு: இணுவைக் குமரன்.

## பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் அருளுரையிலிருந்து.........


1. பிரேமையை வளர்த்துக் கொள்ளுங்கள். மனிதனின் ஒவ்வொரு உயிரையும் கடவுளின் குழந்தை என்று கருதவேண்டும். வெறுப்புணர்வை விட்டொழித்து யாருக்கும் — தீங்கு நினைக்காத, — இழைக்காத — நல்லுணர்வை வளர்த்துக்கொள்ளுங்கள்.

2. நல்ல எண்ணங்களை வளருங்கள். நல்ல வார்த்தைகளையே பேசுங்கள். நல்ல செயற்பாட்டில் ஈடுபடுங்கள். பிறருக்கு எப்போதும் உதவுங்கள். எப்போதும் யாரையும் புண்படுத்தாதீர்கள். (HELP EVER, HURT NEVER). அதுவே உண்மையான பக்தியாகும். பரோபகாரமே புண்ணியம் தருவது. பிறருக்கு உதவாமல் தியானம் செய்வதால் மட்டும் இறைவனை அடையமுடியாது.

3. இறைவன் எல்லோருள்ளும் நிறைந்திருக்கிறான் என்ற தத்துவத்தின் அடிப்படையில் வாழுகிறவர்கள்தான் இறைவனுக்குப் பிரியமானவர்கள்.

4. மனிதவாழ்க்கை மேம்பட்டு விளங்க மூன்று நியதிகள் உண்டு.
   - கடவுளை நேசியுங்கள்
   - பாவத்திற்குப் பயப்படுங்கள்
   - சமூக நீதி தவறாமல் செயற்படுங்கள்.

## அறிவு இருக்கா?



ஒருவன் ஒரு கடைக்குப் போய் கடுகு இருக்கிறதா? என்று கேட்பான். அதற்கு என்ன அர்த்தம்? அவன் வீட்டில் ‘கடுகு இல்லை’ ஆகவே கடையில் வந்து கடுகு இருக்கிறதா? என்று கேட்கிறான். இருந்தால் வாங்கிக் கொண்டு போவான். இல்லையென்றால் வேறு கடைக்குப் போவான்.

அது போல ஒருவன் நம்மைப் பார்த்து, ‘அறிவு இருக்கிறதா? என்று கேட்டால், நாம் கோபித்துக்கொள்ளக் கூடாது. வருத்தப்படவும் கூடாது. அவனிடம் ‘அறிவு இல்லை’. அதனால் நம்மிடம் கேட்கிறான்.

நம்மிடம் இருந்தால் ‘இருக்கிறதய்யா? தருகிறேன்’ என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், ‘என்னிடமும் இல்லை ஐயா. வாருங்கள் இருவரும் போய் அறிவு இருப்பவனிடம் கேட்போம்” என்று கோபப்படாமல்’ கூறவேண்டும்.

—திருக்குறளார் **வீ. முனுசாமி**

# ஒருக்கால் நினைக்கின்.........

உலகிலே முதன்முதல் தோன்றிய ஒலி ஓம். இந்த ஒலியிலேதான் சிவன் ஆதியிலே உருவாக இருந்தார். ஆதியிலே இருந்தார் என்றால் இப்பொழுது இல்லையா? என்று கேட்கக்கூடாது. ஏனெனில் சிவன் ஆதியும் அந்தமும் இல்லாத அரும் பெரும் ஜோதி. இந்த ஓம் எனும் மந்திர ஒலியில் இறைவன் இருந்ததை 'தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந்துாதாய் கோத்தம்பி' என்று மணிவாசகர் பாடுகிறார். ஓம் எனும் ஒலிக்குறிப்பு பற்றி இருக்கு வேதத்தில் வருகின்றது.

'ஓசை ஒலி எல்லாம் ஆனாய் நீயே' என்பது தேவாரம். சமய குரவர்களில் முதல் வைத்து எண்ணப்படுபவர் ஞானசம்பந்தப்பெருமான். இவரின் பெயரின் முன் திரு என்னும் அடை சேர்த்து திருஞானசம்பந்தர் என்று நாம் அழைப்போம். திரு என்றால் கண்டாரால் விரும்பப்படும் தன்மை அல்லது நோக்கம் என்று உரையாசிரியர்கள் உரை செய்வார்கள். ஆனால் இந்த ஞானசம்பந்தரோ தன்னை திருஞானசம்பந்தர் என்று அழைப்பதிலும் பார்க்க தமிழ் ஞானசம்பந்தர் என்று அழைப்பதிலேயே பெருமை கொள்ளுகிறார். இவருக்கு ஏன் இந்தப் பெருமையிலே ஆசை வந்தது? இந்த ஆசைக்கான காரணம் ஞானசம்பந்தர் தான் 'ஓம்' எனும் மந்திரத்தை முதன் முதலாக தமிழ்ப்படுத்தி 'தோடு' என்று கையாண்டவர்.

த்ஓ என்பது சேர்ந்தால் 'தோ' வரும். அதோடு உகரத்தைச் சேர்த்து தோடு என்று ஆக்கினார். தோடு என்றால் ஓம் என்பது கருத்து. 'தோடுடைய சேவியன' என்பது இவருடைய முதல் தேவாரம். இந்த தோடுடைய சேவியனுக்கு பலவாறு வியாக்கியானங்கள் பல அறிஞர்கள் செய்திருக்கின்றார்கள். எனக்கும் ஒரு புதிய கருத்து தோன்றுகிறது. இதுவரை ஒருவருமே சொல்லவில்லை இனிமேல் இதைப் பார்த்தபின் சொல்வார்கள். சிவபெருமானுக்கு பிரணவ மந்திரத்தின் பொருளை முருகப்பெருமான் உபதேசித்தவர். இதனால் முருகனுக்கு சுவாமிநாதன் என்று பெயருண்டு. இந்த வரலாறு உங்களுக்குத் தெரியும். முருகப் பெருமான் ஓம் எனும் மந்திரத்தை ஓதியபோது கேட்ட செவியை உடையவன். ஓம் உடைய செவியன் தமிழிலே தோடுடைய செவியன் என்று ஆகியிருக்கின்றது. ஆக முருகப் பெருமான் தோடு என்று பிரணவ பொருள் சொன்ன செவியன் என்பது கருத்து.

'சிவனார் மனங்குளிர உபதேச மந்திரமிரு
செவி மீதினும் பகர்செய் குருநாதா' என்பது திருப்புகழ். முருகப் பெருமான் தான் திருஞானசம்பந்தப் பெருமான் என்று பலத்த நம்பிக்கை நம் அறிஞர் பெருமக்களிடையே உண்டு. புராணங்களிடையே கூடிய கிரந்தங்களை உடையது கந்தபுராணம். அப்படி முருகனின் பெருமையே பெரிது. கந்தபுராணத்தைவிட குறைந்த பாடல்களை உடையது சேக்கிழார் செய்த திருத்தொண்டர்புராணம். ஆனால் அதற்குப் பெரியபுராணம் என்று பெயர். ஏனெனில் அதில் திருஞானசம்பந்தரையே அரைவாசிக்கும் மேற்பட்ட பாடல்கள் குறித்து நிற்கிறது. இதனால்தான் 'பிள்ளைபாதி புராணம்பாதி' என்று சொல்லுவார்கள். பிள்ளை என்று ஞானசம்பந்தருக்கு பெயருண்டு. பெரியபுராணம் அளவில் பெரிதல்ல அதன் சிவ தன்மையால் பெரிது. ஆதலினால் அது மாக்கதை. இதில் இருந்து முருகனின் அவதாரம் தான் ஞானசம்பந்தர் என்று தெரிகிறது.

ஓம் எனும் மந்திரத்தின் விரிவு 'நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க' என்பதாகும். இதில் உள்ள நாதன் என்ற பதத்தை நாதம்,அன் என்று பிரிக்கலாம். நாதம் என்றால் சத்தம். அன் என்பது ஆண்பால் விகுதி. நாதன்

என்றால் சத்தமுடையவன் என்பது பொருள். சத்தம் இடுவது ஆண்களுக்கே உரிய செயல். பெண்கள் சத்தமிடக்கூடாது. சத்தம் போட்டால் பெண் இல்லை. நாதனுக்கு எதிர்ப்பால் சொல் நாதி. நாதி என்றால் ஒன்றுமில்லை என்பது பொருள். சாதாரண பேச்சு வழக்கில் 'நாதியற்ற பயல்' என்பதெல்லாம் ஒன்றும் இல்லாதவன் என்ற கருத்தில்தான் வழக்கத்தில் வந்தது. நாதனுக்கு எதிர்ப்பால் சொல் நாயகி என்று பலர் எண்ணுகிறார்கள். அது தவறு. நாயகனுக்கு எதிர்ப்பால் தான் நாயகி என்னும் சொல்லாகும். இந்த ஓமின் விரிவின் ஒடுக்கம்தான் 'அர்த்தநாரி' வடிவம். அர்த்தநாரியை அர்த்த நாதி என்றும் சொல்லலாம் போல் எனக்கு தோன்றுகிறது. இந்தக் கருத்துப்பட அபிராமிப்பட்டர்

'உமையும் உமையொருபாகனும் ஏக உருவில் வந்திங்கு

எமையும் தமக்கன்பு செய்யவைத் தார்' என்று பாடுகிறார். நாதி என்றால் சத்தம் இல்லாத சொல் என்றேனே. இதை ஏன் சொன்னனான் என்றால் பெண்கள் சத்தம் போடக்கூடாது என்பதற்காகவே. பெண்களை 'மடப்பிடி' என்று அழைப்பார்கள். மடப்பிடி என்றால் பெண்யானை. ஆண்களைவிட பெண்களுக்கு உடம்பு கூட. அதேபோல ஆண் யானையைவிட பெண்யானைக்கும் உடம்பு கூட. ஆனால் அந்த யானை நடக்கின்றபோது சத்தம் கேட்காது. அதுதான் பெண்மை. அதுதான் நாதி. இதைத்தான் அருணகிரியார்

'பிடிதோய் நடையாய்' என்றார்.

'பிடியென நடையாய் பெய்வளை மடந்தை' என்பது தேவாரம். சாதாரணமாக வீடுகளிலே பெண்கள் நடக்கின்றபோது சத்தமாக எடுத்தடி வைத்தால் பூமாதேவிக்கு அடுக்காது என்று சொல்லுவார்கள். இதன் கருத்து பெண்கள் சத்தமிடக்கூடாது மென்மையாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான்.

'நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாண நடை
கற்கும் பாதாம்புயத் தாயே' என்னும் குமரகுருபரர் கூற்றும் பெண்ணின் நடையையும் நடத்தையையும் பட்டும் படாததுமாய் சொல்லுகிறது.

'ஓம்' எனும் மந்திரம் சிவனுடைய மந்திரம். 'ஓ! என்று சொல்லக் கரியானை' என்பது திருவாசகம். ஓம் எனும் மந்திரத்தின் ஒடுக்கம் ஓ! என்பதாகும். இதனை பேய் ஓட்டு மந்திரம் என்று சொல்லலாம். பேயைக் கலைக்கின்றபோது ஓ! ஓ!! என்றுதான் விரட்டிக்கலைப்பார்கள். ஓம் என்ற மந்திரத்தை ஓ! என்று சொல்லும் தகுதி எல்லோருக்கும் எளிதில் கிட்டிவிடாது. அதற்கு சாதனை செய்து சித்தியடைந்திருக்க வேண்டும். 'நமச்சிவாய' மந்திரத்தை ஓதுகின்ற சாதகர்கள் சாதனையின் உச்சத்துக்குச் சென்றால் நமச்சிவாய மந்திரத்தில் உள்ள சி என்ற எழுத்தை மட்டுமே உச்சரிப்பர். அந்த எழுத்தைக்கூட சி என்று உச்சரிக்காமல் 'சீ' என்று எச்சரிப்பர். இப்படி உச்சரிப்பதை நீங்கள் கேட்டு இருக்கமாட்டீர்கள். இது இலக்கிய வித்தகர் முனைவர் க.செ.நடராசா ஒரு திருவாசக விழாவில் பேருரையாற்றும் போது தனது தாய் ஒரு நமசிவாய மந்திர சாதகர் என்றும் அவரின் இடைவிடாத சாதனைத் திறத்தைக் கண்ட ஒரு சாமியார் இனி நீ பஞ்சாட்சர எழுத்து முழுவதையும் சொல்லாமல் அதில் உள்ள நடு எழுத்தான சி ஐ 'சீ' என்று உச்சரி என்று சொன்னாராம். இது சாதனைத்திறத்தினால் வருவது. இவ்வெழுத்தை நாயோட்டு மந்திரம் என்று சொல்வார்கள். நாயை சீ! நாயே ஓடு என்றுதானே கலைப்பது வழமை. எம்மிடமுள்ள காமமாகிய பேயை ஓ! ஓ! என்று ஓட்டவேண்டும். ஆசையாகிய நாயை சீ! நாயே என்று கலைக்க வேண்டும். இந்நிலையை ஒரு சாதகர் இடைவிடாத ஜெபத்தினாலேயே அடையமுடியும். அப்படி செபம் செய்கின்றபோது இறைவன் உள்ளத்திலே படிவான்.

'ஓம் மெழுத்தி லன்பு மிகவூறி

ஓவியத்தி லந்தம் மருள்வாயே' என்பது திருப்புகழ்.

'உள்ளக்கிளியில் உருவெளிதி' என்பார் அப்பரடிகள்.

ஓம் எனும் மந்திரத்திலே சத்தி கூறனாகவும் ஓ! எனும் மந்திரத்தில் சத்தியுடனும் சிவன் விளங்குகின்றார். இதை மணிவாசகர்

'குவளைக் கண்ணி கூறன் காண்க

அவளுந் தானு முடனே காண்க' என்கிறார்.

'ஒன்றே' எனினின் ஒன்றேதும் 'பல' என்று உரைக்கின் பலவே ஓம் என்றும் கம்பர் வாக்கும் இதனை மெய்ப்பிக்கும். சமய ஒலியின் உட்பொருள் இவ்வளவு நேரமும் சொன்னதில் இருந்து விளங்கும் இனி சமய ஒலியின் தோற்றப் பொருளை சொல்கிறேன். ஓம் எனும் மந்திரத்தில உள்ள ஓ என்ற எழுத்தை மட்டும் நாம் முதலில் சொல்லிப் பார்க்கவேண்டும். அப்படிச் சொல்லுகின்றபோது சொண்டு மேலே போகின்றது இது ஆதி(Top). அடுத்தது 'ம என்ற எழுத்தை சொல்லிப்பார்க்கவேண்டும். இரண்டு சொண்டும் ஒன்றாகிறது. இது அந்தம்(Bottom) இதுதான் உலக சிருஷ்டியும் ஒடுங்கலுமாகும். 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதி' என்பது இதுதான். உலகில் வாழ்கின்ற சீவராசிகள் எல்லாம் ஓம் என்னும் சமய ஒலிக்கு அமைவாகத்தான் இயங்குகின்றன.

'மிசை பரியின் மிசை வரவேணும்' என்பது அருணகிரியார் வாக்கு. 'ஓங்காரபரி' என்றால் மயில். பரி என்றால் குதிரை. ஆனால் இங்கே மயிலுக்கு ஆகிவந்துள்ளபடியினால் இதனை உவமை ஆகுபெயர் என்று இலக்கணத்தில் சொல்லுவர். இந்த இலக்கணம் இருக்கட்டும் இதனுடைய இலக்கியத்தை நோக்குவோம். மயிலானது ஒற்றைக்காலை ஊன்றி மற்றைக்காலை தூக்கி கழுத்தை வளைத்து தோகையை வளைத்து ஆடுகின்றபோது ஓங்கார வடிவினதாக இருக்கிறது. மயில் ஆடுகின்றபோது ஓங்காரமாக ஆடுகின்றதென்றால் நாம் எல்லாம் எவ்வாறு ஆடவேண்டும்?.

'சங்கு திரண்டு முரண்டெழும் ஓசை தழைப்பன ஆகாதே'

என்பது திருவாசகம். சங்கானது இனப்பெருக்கத்திலே ஈடுபடுகின்றபோதும் வேறு ஆபாச ஒலிகளை எழுப்பாமல் ஓம் என்றுதானாம் அனுங்குகின்றன. இவ்வளவு கருத்திலும் இருந்து ஓம் எனும் மந்திரத்தை விட மேற்பட்ட மந்திரம் உலகத்தில் வேறு எதுவும் இல்லை என்பது பெறப்படும்.

'ஓரெழுத்து மந்திரத்தை ஓம் என்று சொல்லுவோம்.

வடிவேலு ஞானகாந்தன்.

# ஐரோப்பிய இந்து மறுமலர்ச்சி விஜயம்

*ஐரோப்பாவில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களின் அழைப்பின் பேரில் அமெரிக்க சைவ சித்தாந்தத் திருச்சபையின் தலைவரும் யாழ்ப்பாணத்து சிவ யோகசுவாமிகளின் சீடருமாகிய குருதேவர் சிவாய சுப்பிரமுனியசுவாமிகள் 1993 ஆம் ஆண்டு ஆனி மாதம் இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த போது ஆற்றிய அருளுரைகளிலிருந்து சில பகுதிகளை இங்கு தொகுத்துத் தருகின்றோம். ஓம்.*



வணக்கம்! இன்று மாலை இந்த அழகிய ஆலயத்தில் உங்கள் அனைவரையும் சந்திப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முதற்கண் எனது சற்குரு யாழ்ப்பாணத்து மாமுனிவர் சிவ யோகசுவாமிகளுக்கு எனது நன்றியும் வணக்கங்களும் உரித்தாகட்டும். அவர் இல்லையேல் இன்று நாம் அனைவரும் இங்கு ஒன்று கூடியிருக்க முடியாது. உங்களில் பலரைப் பல வருடங்களுக்குப் பின்பு இன்று சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. எமது அளவெட்டி ஆச்சிரமத்தில் சிறுவர்களாகப் படித்துக் கொண்டிருந்த பலர் இன்று வளர்ந்து இளைஞர்களாக இந்த மண்டபத்தில் இருப்பதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையிலிருந்து அண்மைக் காலங்களில் இந்த ஐரோப்பிய நாடுகளில் வந்து குடியேறிய நீங்கள் ஆங்காங்கே சிறு கோயில்களையும் சற்சங்கங்களையும் அமைத்து எமது சமயத்தையும், கலாச்சாரத்தையும் பேணி வருவதைப் பார்த்து நான் மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன்.

இந்து சமயம் உலக சமயங்களிடையே தனித் தன்மை வாய்ந்தது. இந்து சமயம் ஒரு தனிப்பட்ட மனிதனால் தோற்றுவிக்கப்படாதது மட்டுமன்றி தோன்றிய காலமற்ற ஓர் சமயமாகும். எனவே இதற்கு முடிவும் இல்லை. இந்து சமயத்தில் மூன்று சிறப்பான அம்சங்கள் உள்ளன. அவையாவன கோயில்கள், புனித நூல்கள், சற்குருமார். இவையே இந்து சமயத்தின் மூன்று பெருந் தூண்களாகும். இந்து சமயத்தின் புனித நூல்களாகிய வேதங்கள், ஆகமங்கள் என்பன எரிக்கப் பட்டாலும் அவற்றை ஞானிகள் மீள எழுதிவிடுவார்கள். சற்குருமாரை அழித்தாலும் அவர்கள் மறுபிறவி எடுத்து தமது சேவையைத் தொடருவர். கோயில்கள் அழிக்கப்பட்டாலும் அந்த இடத்தில் மீண்டும் பெரிய கோயில்கள் கட்டப்படும். சரித்திர ரீதியாக இவற்றை நாம் நன்கு அறிவோம். எனவே இந்து சமயத்தை யாராலும் அழித்துவிட முடியாது.

அண்மைக் காலங்களில் உலகெங்கும் ஓர் இந்து மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து பல சுவாமிகள் உலகெங்கும் சென்று ஆச்சிரமங்களை நிறுவி வருகிறார்கள். பல நாடுகளிலும் இந்துக் கோயில்கள் ஆகம முறைப்படி கட்டப்பட்டு வருகின்றன. அமெரிக்காவில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட இந்துக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் பல ராஜ கோபுரங்களுடன் கோடிக்கணக்கில் செலவிட்டுக் கட்டப்பட்டுள்ளன. கடந்த வருடம் மட்டும் தொண்ணூறு சுவாமிமார் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு வந்து நாடு பூராவும் சற்சங்கங்கள், பிரசங்கங்கள் என்பனவற்றை நடாத்தியுள்ளார்கள். அமெரிக்காவில் இந்துப் பல்கலைக் கழகம் உருவாகியுள்ளது. இவை கிறீஸ்தவர்களுக்கு பெரும் ஏமாற்றம். காரணம் அவர்களின் மதமாற்ற நடவடிக்கைகளுக்கு இது ஓர் பெரும் தடையாகவுள்ளது. ஆயிரக் கணக்கான மேலைத் தேச மக்கள் சனாதன தர்மத்தின் உண்மைகளை நாடி வருகிறார்கள். இந்நிலையில் இலங்கையில் இருந்து இந்த மேலைத் தேசநாடுகளில் வந்து குடியேறிய நீங்கள் உங்கள் சமயம், கலாச்சாரம் ஆகியவற்றை நல்ல முறையில் பேண வேண்டும். இங்கு வளரும் இளைய சமுதாயம் மிக இலகுவில் மேலைத்தேச கலாச்சாரத்துக்கு இழுக்கப்படலாம். அவர்களை நல்வழிப்படுத்துவது பெரியவர்களின் பொறுப்பு. அத்தோடு இலங்கையிலிருந்து புதிதாக இவ்விடம் வருபவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டியதும் உங்கள் கடமையே. அவர்களை நல்ல தொழில்களைப் பயின்று வாழ்க்கையை வளமாக்குமாறு ஊக்குவியுங்கள். இளைஞர்களும் மேலைத்தேசக் கலாச்சாரத்தைப் பின்பற்றாது பெரியவர்களை மதித்து அவர்களின் அறிவுரைகளைக் கேட்டுச் செயற்பட வேண்டும்.

உலகெங்கும் கிறீஸ்தவர்கள் இந்துக்களை மதமாற்றம் செய்வதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். குறிப்பாக இளைய சமுதாயத்தைக் கிறீஸ்தவர்களாக்குவதற்குப் பெரிதும் முயன்று வருகிறார்கள். ஒரு குடும்பத்தில் இரண்டு சமயங்களைப் பின்பற்றுவதால் குடும்பங்களுள்ளே பிளவு ஏற்படுகின்றது. கிறீஸ்தவ சமூகம் இந்து இளைஞர்களை இந்து சமயத்தை மறுக்கவும் அதற்கு

எதிராகப் பேசவும் தூண்டுகின்றது. இந்துக்களோ கிறீஸ்தவர்களை சகித்துக் கொள்கிறார்கள், காரணம் எல்லா மார்க்கங்களும் நல்ல மார்க்ங்களே என இந்துக்கள் நம்புகின்றனர். உங்கள் குழந்தைகளின் மனம் சனாதன தர்மத்தின் உண்மைகள் நிரம்பியதாக இருக்க வேண்டும். இஸ்லாமிய மதம் இன்று உலகில் வெற்றிகரமான ஓர் மதமாக உள்ளது எவ்வாறு? காரணம் ஒரு இஸ்லாமிய குழந்தை ஐந்து வயதாக இருக்கும் போதே தனது சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளைக் கற்றுக் கொள்கிறது. இந்த இளம் வயதிலேயே சமய நம்பிக்கைகள் அவர்களின் மனதில் நன்கு பதிந்து விடுகிறது. அவர்கள் வளர்ந்து பெரியவர்களானதும் தமது சமயத்தில் உறுதியாக இருக்கிறார்கள். உங்கள் குழந்தைகளுக்குச் சமயக் கருத்துக்களைப் போதியுங்கள். நீங்கள் போதிப்பது உங்கள் குழந்தைகளுக்கு புரிகிறதா இல்லையா எனக் கவலைப்பட வேண்டாம். குழந்தைகள் பெற்றோர்களின் செயல்களின் மூலமே கற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் தமது பெற்றோரின் செயல்களை நன்கு கவனிக்கிறார்கள். அவர்களால் சமய உண்மைகளை விளங்கிக் கொள்ள முடியாது விட்டாலும் அவற்றைக் கிரகித்துக் கொள்கிறார்கள். எனவே பெற்றோர்கள் பிள்ளைகளின் சமய வாழ்க்கைக்கு உதாரணமாக இருக்க வேண்டும். இந்துக்கள் தமது சமய உண்மை-களை நன்கு படித்துணர வேண்டும். அப்போது தான் கிறீஸ்தவர்கள் உங்களிடம் தமது சமயத்தைப் போதிப்பதற்கு வரும் போது வணக்கம், எனக்கு எனது சமய உண்மைகள் யாவும் தெரியும் நன்றி, நீங்கள் போய் வாருங்கள் என்று அவர்களுக்கு கூறக் கூடியதாக இருக்கும்.

உங்கள் தினசரி வாழ்வில் சமயத்தை நல்ல முறையில் கைக்கொள்ளுங்கள். தினமும் சூரிய உதயத்துக்கு முன் எழுந்து உங்கள் வீட்டுப் பூஜை அறையில் குடும்பத்தோர் எல்லோரும் ஒன்று கூடி வழிபாடு செய்யுங்கள். சைவர்களாக வாழுங்கள். இறைச்சி, மீன், முட்டை போன்ற மாமிசங்களை உண்பதைத் தவிருங்கள். நீங்கள் மாமிசத்தை உண்ணும் போது மிருக உணர்வையும் சேர்த்தே உண்ணுகிறீர்கள். இவை உங்கள் மனதில் கோபம், பொறாமை, பயம் போன்ற மிருக உணர்வுகளைத் தூண்டுகிறது. உங்கள் பிள்ளைகளை அடித்துத் துன்புறுத்த வேண்டாம், மாறாக அவர்கள் மீது அன்பு காட்டித் தயவாக வளருங்கள். பிள்ளைகளை அவர்களின் எண்ணம் போல்ச் செயற்பட விடாமல் அவர்களை நல்ல முறையில் நெறிப்-படுத்துங்கள். உங்கள் வீடுகளிலே தெய்வீக இசைகளைக் கேளுங்கள். இரண்டு விதமான இசைகள் உள்ளன. ஒன்று தெய்வீக இசை. பக்திப் பாடல்கள், வீணை போன்ற இசைகள் உங்கள் வீடுகளுக்கு தேவர்களை வரவழைக்கின்றன. வீட்டிலே அமைதி, அன்பு என்பன நிலை கொள்கின்றன. மற்றையது றெக்கன்றோல் போன்ற கீழ்த்தரமான இசைகள். இவை உங்கள் வீடுகளுக்கு அசுரர்களை வரவழைக்கின்றன. இதனால் வீட்டில் கோபம், பொறாமை சச்சரவு என்பன உருவாகின்றன. எனவே நல்ல இசைகளைக் கேட்டு உங்கள் வீடுகளிலே சாந்தம் குடி கொள்ளச் செய்யுங்கள்.

அண்மையில் நாம் ஓர் இந்து வினா விடைப் புத்தகத்தினை (Dancing with Siva) வெளியிட்டுள்ளோம். இந்து சமயத்தைப் பற்றி ஒருவர் கேட்கக் கூடிய எல்லா வினாக்களுக்கும் இந்தப் புத்தகத்தில் விடையளிக்கப் பட்டுள்ளது. எங்களிடம் சிறுவர்களுக்கும் பெரியவர்-களுக்குமான ஓர் சமய வீட்டுப் படிப்புத் திட்டம் பல மொழிகளில் உள்ளது. உலகின் பல பாகங்களிலும் அடியவர்கள் இவற்றைப் படித்து வருகிறார்கள். இன்டுயிசம் டுடே (Hinduism Today) என ஓர் சர்வதேச பத்திரிகையை எட்டு நாடுகளிலே வெளியிட்டு வருகிறோம். இப் பத்திரிகை இந்துக்களின் குரலாக உலகெங்கும் ஒலித்து வருகிறது. இவற்றை நீங்களும் படிக்க வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம்.

குவை ஆதீனத்தைச் சேர்ந்த நாம் உங்கள் சமய வாழ்க்கைக்கு எம்மால் முடிந்த சகல உதவிகளையும் செய்யக் காத்திருக்கிறோம். உங்கள் கோயில்களுக்கும் சங்கங்களுக்கும் எமது ஆதரவு என்றும் உண்டு. உங்கள் தேவைகளை எமக்கு எழுதுங்கள். இந்து சமயத்துக்காக உறுதியாக நில்லுங்கள். ஐரோப்பாவில் இந்து மறுமலர்ச்சிக்கு நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படுவோம். அன்பே சிவமயம் சத்தியமே பரசிவம், வணக்கம். ஓம் நம சிவாய!



# மலரும் மனமும்

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுழி வாழ்வார்"

மலரை அழகோடும் மனித உணர்வோடும் ஒப்பிடுதல் நூலோர் வழமை. மலருக்கு அழகு இயல்பாக உள்ளது. அது வண்டையும், புற்களையும், மனதையும் ஈர்க்கும் வல்லமை உள்ளது. தன்னை வாட்டுவதோ, பிறரை வதைப்பதோ அவ் அழகிற்கு இல்லாத குணங்கள்.

பக்தி மலர்:

ஆலய மூர்த்திகளிற்குள் விசேடமாக உலா வரும் உற்சவ மூர்த்திக்கு நாம் மலர் மாலைகளும் பொன் ஆபரணங்களும் சூட்டுகின்றோம். காரணம் - செயற்கை அழகாம் ஆபரணங்களும், இயற்கை அழகாம் மலர்மாலைகளும், தெய்வீக அழகொளி வீசும் மூர்த்தியோடு இணைந்து ஒருங்கு இருப்பது நம் எல்லோருக்கும் கண் கொளாக் காட்சியன்றோ. இதனாலன்றோ இம்மரபு இந்துமதப் பக்தர்களிடையே விளங்கும் விக்கிரக வழிபாட்டு முறைகளுள் முக்கியமான ஒன்றாய் நிலைபெற்றுள்ளது. இந்த வழமைப்படி நம் ஆலயங்களிற் தினமும் மலர் பூசை, மலர் அர்ச்சனை, மந்திரபுஸ்ப சமர்ப்பணம் நடைபெறுகின்றன. மூன்று விரல்களாற் பூ எடுத்துச் சமர்ப்பிக்கும்பொழுது, மும்மலங்களையும் ஒடுக்கி உன் திருவடி உணர்வில் மூழ்குகிறோம் என்றாகும். ஐந்து விரல்களாற் சமர்ப்பிக்கையில் ஐம்புலன்களையும் ஓர் முகப்படுத்தி உன் பாதகமலத்தைச் சிரமேற் பூண்கிறோம் என்றாகும்.

ஈழத்து ஆலயங்களில் தாமரை, அல்லி, மல்லிகை, செவ்வரத்தை போன்ற பூக்கள் நிறைந்து காணப்படும். ஆலயத்திற்கு உகந்த பூக்களை நம் பெற்றோர், முதியோர் காட்டிக் கொடுத்தபடி செய்து வருகின்றோம். பரம்பரையாகச் செய்து வரும் போது அது தானாக இலேசாக வந்தமைகின்றது ஆயின் வன்கூவர் வாழ் துர்க்காதேவி அடியார்களாகிய நாம் இப் புகுந்த நாட்டில் பல புது விதமான பூக்களைக் கண்டு வியக்கின்றோம். அவற்றுள் எவற்றை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லலாம், எவற்றை எடுத்துச் செல்லக் கூடாது என்று சில பொழுது திகைக்கின்றோம். பூக்களுள் அழகற்றன என்று எதையும் சொல்லமுடியாது. ஆயினும் கீழ்வரும் மூன்று விதமான பூக்களைத் தவிர்க்க வேண்டும்.

1. நச்சுப் பூக்கள் - சில தொட்டாலே சுணைக்கும், சில உண்டால் உடலை வருத்தும்.
2. கொய்யும்போது காம்பிலிருந்து நச்சுப் பால் வடியும் பூக்கள்.
3. காயாகிக் கனியாகி உணவாகும் பூக்கள்.

முன்னைய இரண்டும் ஆரோக்கியத்திற்காகவும் பின்னையது பொதுநலனுக்காகவும் அமைந்த காரணங்கள்.

சைவர்கள் வணங்கும் முறைகளை மணிவாசகர் நன்கு விளக்குகின்றார்.

ஆடுகின்றோம் - நடனம், நாட்டியம், காவடி, உரு

கூத்து உடையான் கழற்கு அன்பினால் என்பு உருகிப் பாடுகின்றோம் - தேவார திருவாசக புராணங்கள், பஜனைகள், மந்திரங்கள்.

பதைப்பதும் செய்கிறோம் - பக்திப் பெருக்கு, உணர்ச்சி நடுக்கம், கண்ணீர்.

பணிகிறோம் - விழுந்து கும்பிடல், அஷ்டாங்கம், அடி அழித்தல், சிவசக்தி வணக்கம்.

பாதமலர் சூடுகின்றோம் - மலர், மலர், மலர்.

சூட்டுகின்றோம் - மலர், மலர், மலர்.

நெஞ்சினால் துணை தேடுகின்றோம் - மௌனம், விரதம், யோகம்.

தெருவு தோறும் அலறுகின்றோம் - தேர்த்திருவிழா, மானம்பூ, திருவெம்பாவை. செய்வதொன்று அருள்வாயே - வேண்டுவன வேண்டுதல்.

பக்தர்களுக்கு பாதார விந்தம் (பாதஅரவிந்தம் - பாத தாமரை) அரணாகிறது. சூரிய ஒளிபட்டு பூக்கள் மலர்வது போல் இறை அருள்பட்டு அடியார் மனதில் பக்தி மலர்கிறது. அவன் அருளால் அவன்தாழ் வணங்குகிறோம்.

மலரும் குழந்தை:

குழந்தைகள் எல்லாம் மனிதமலர். குழந்தைகளின் முகமலர்ச்சியை இரசிக்காத நெஞ்சமும் உண்டோ? மனமலர்ச்சி குழந்தைகளிடம் இயல்பாகவே உள்ளது. பெற்றோர், முதியோர் ஆகிய நாம் அதன் சாத்வீக வளர்ச்சிக்குத் தடையாக இருக்காமல் இருந்தாலே போதுமானது. குழந்தைகளே நம் சமுதாயத்தின் வருங்காலம். அவர்கள் வருங்காலம் நம் கையில். நம் சமுதாயத்தின் வருங்காலம் அவர்கள் கையில். நம் முதியோர் நமக்கு அளித்த உலகத்தை ஒருபடி உயர்த்தி நம் சந்ததியாருக்குக் கொடுக்க வேண்டியது மானிடராய் பிறந்த நம் எல்லோரது கடனாகும்.

பாச மலர்:

மன்மதன் எய்வது பாசமலர்
இளைஞருக்கு யுவதிகள் மலர்
தம்பதிகள் மாற்றும் மாலையில் மலர்
கணவனுக்கு மனைவி மலர்
மங்கையர்க்குக் கூந்தலில் மலர்
பிணத்திற்குப் பெட்டியின் புறத்தில் மலர்.

காதலன் காதலியை மலர்க்கொடியே என வர்ணிப்பான். ஆதனால் முதிர்ந்த கணவனுக்கு தன் மனைவி மலர்க்கொடியாகாள் என எண்ணிவிடக்கூடாது. 'மலர்க்கொடி என்றும் மலர்க்கொடியேதான்' ஆயினும் கல்யாணமாகிப் பொறுப்புக்கள் தலைக்குமேல் ஏறும்பொழுது, அந்தத் தடுமாற்றத்தில் 'கொடியே' என்பதற்குப் பதிலாய் 'அடியே' என்று சிலர் வாயில் வருகிறது போலும். இதை வெறும் விகடமாகவே எடுத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் !அடியே' என்ற சொல்லின் உட்பொருளைக் கூறின் அது 'எடி - தோழி' என்ற நற் பழந்தமிழ் சொல்லிலிருந்து மருவியதாகும். தமிழன் ஒருவன் தன் மனைவியை 'அடியே' என்று அழைத்தால் அதன் உள் (உண்மை) அர்த்தம் என்னவெனில், 'குடும்பப் பொறுப்பு, இன்ப துன்பங்கள் எல்லாவற்றையும் நாம் இருவரும் நல்ல நண்பர்கள் போல் சம பங்கு கொண்டு இல்லறத்தை நல்லறமாக நடாத்துவது மட்டுமல்ல, உனக்கு எந்த ஆபத்து வரினும் என் உயிரைக் கொடுத்தும் உன்னைக் காக்கும் தோழனே நான்' என்ற மனப்பான்மையை வெளிப்படுத்துவதாகும். அஃதாகையால் அப்படி அழைக்கும் ஆண்கள் அதன் அர்த்தப்படி ஒழுகவும் வேண்டும்!

யோகமலர்:

யோகமலர் என்பது குண்டலினி என்னும் சக்தி உடலின் ஏழு பகுதிகளில் ஏழு விதமாக மலர்கிறது. யோகிகளின் சித்தமும் அதற்கேற்ப சித்தம் பெற்று மலர்கிறது. சித்தம் என்னும் நாத வித்து ஆதி சக்தியோடு ஈடுபட்டு, குண்டலினி எனும் உருக்கொண்டு, யோனியிற் கருவாகி, தொப்புளில் தளிர்விட்டு, நெஞ்சினில் படர்ந்து, கண்டத்தில் திரண்டு, மண்டைக்குள் பூத்துக் கொழுத்து,

தியானத்தில் காயாகி, முடி உச்சியில் பழமாகி, அமுதாக மறுபடியும் மூல சித்தத்துள் ஊறும் பொழுது, 'இடைவிடாச் சித்த அமுத சரச்சக்கரம்' தோன்றுகின்றது. அப்படியாக குண்டலினி சக்தியை ஏழு சக்கரங்களிலும் ஏற்றிய இந்நிலையில் உள்ளோரை, 'எல்லாம்வல்ல சித்தர்' என நூலோர் கூறுவர். அதற்கும்மேல், முக்தி, சமாதி என்றொரு சும்மா இருக்கும் நிலை ஒன்றே யோகிகளின் துணிவு, யோகிகளின் முடிவு.

வி. தி

# உலோபியின் தந்திரம்

உலகத்தில் உபயோகமற்றவை ஒன்றுமில்லை. கல் கோயிலாகின்றது; கழுதை பொதிசுமக்கின்றது; எருமை நிலம் உழுகின்றது; கட்டம் பன்றிக்கு இரையாகின்றது. குட்டிச் சுவர் மறைவுக்கும் மாடுரிஞ்சவும் ஆகின்றது; துடைப்பம் சுத்தப்படுத்துகின்றது; பிணம் பலருக்குத் தானம் வாங்கித் தருகின்றது; எட்டியும் வேம்பும் மருந்துக்காகின்றன. எல்லாம் உதவுகின்றன. ஆனால், சிருட்டியில் உபயோகமில்லாப் பொருள் ஒன்றுதான். அது அஃறிணையன்று. உயர் திணையாம். ஊலோபி உருவன்தான் யார்க்கும் பயனற்றவன். தானுந் தின்பதில்லையாதலால் தனக்கும் ஒன்றும் ஈயாததால் பிறர்க்கும் பயன்படாதவன்.

“இத்தகைய பயன்படாத லோபியை ஏன் படைத்தாய்?” என்று பட்டினத்தடிகள் இறைவனை வினவுகின்றார்.

**“ஈயாத மனிதனை ஏன் படைத்தாய் கச்சி ஏகம்பனே”**

உலோபிகள் தனக்கும் பிறர்க்கும் பயனின்றியிருப்பதால் அவர்களைச் சிருட்டி செய்த ஈஸ்வரனுக்கும் திண்டாட்டம். “இவர்களை ஏன் படைத்தாய்?” என்று திருவெண்காடர் கேட்ட கேள்விக்குப் பதில் என்ன சொல்வது? என்று விழிக்கின்றார். இப்படி இறைவனையுந் திண்டாட விடும் பெருமை உலோபிகளுக்கே உண்டு. என்ன அதிசயம்? இந்த அற்புதப் பிண்டங்கள் தனிப்பிறவிகள் தான். ஓர் உலோபியின் தந்திரத்தை எடுத்துக் காட்டுவோம்.

ஓர் ஊரில் லோப குணமே ஒருருவெடுத்து வந்தாற் போன்ற ஒரு லோபி இருந்தான். பசியால் களைத்து வாடிய ஏழை ஒருவன் அந்த லோபி வீட்டில் நுழைந்து “அம்மா! வயிறு பசிக்கின்றது; இத்தனை சோறு கொடுங்கள்” என்றான். அறுந்த விரலுக்குச் சுண்ணாம்பு தராத அந்த லோபி வெளியே வந்து, “அப்பா! என்ன செய்யலாம் பாவம்! கடவுள் ஏழைகளைத்தான் சோதிக்கிறார். உன்னைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கின்றது. வயிறு ஒட்டிப் போயிருக்கின்றது. பாவம் நீ சாப்பிட்டு எத்தனை நாளாயிற்றோ? நீ உனக்குச் செல்வம் இருந்தால் இப்படி வந்து இந்தப் பாழும் வெயிலில் வீடு வீடாய் பிச்சைக்கு அலையமாட்டாய். அப்பா! அதோ தெரிகின்ற கடைக்குப் போய் ரொட்டி வாங்கி வந்து இருவரும் உண்டு பசியாறலாம், வா” என்று அவனை அழைத்துக் கொண்டு போய்க் கடைக்காரனைப் பார்த்து, “ஐயா! நல்ல ரொட்டி இருக்கிறதா?” என்று கேட்டான்.

கடைக்காரன் “ஐயா! முதல் தரமான ரொட்டி இருக்கின்றது. வெண்ணெயைப்போல் மிருதுவாகவும் வெண்மையாகவும் இருக்கும்” என்றான். லோபி பிச்சைக்காரனைப் பார்த்து, “அப்பா! உவமானத்தினும் உவமேயம் உயர்ந்தது, அன்னக் குவியல் மலைபோல் இருந்தது என்றால், அன்னக் குவியலைவிட மலை பெரியது என்றுதானே பொருள். அதுபோல் ரொட்டி வெண்ணெய் போல் இருக்குமென்று இவன் சொல்வதிலிருந்து, ரொட்டியைக் காட்டிலும் வெண்ணெய் உயர்ந்ததென்று தெரிகின்றது. ஆதலால் நாம் வெண்ணெயை வாங்கிக் கொள்ளலாம் வா” என்று வெண்ணெய்க் கடைக்கு அழைத்துப் போனான். வெண்ணெயக் கடைக்குப்போய், “நல்ல வெண்ணெய் இருக்கிறதா?” என்று கேட்டான். கடைக்காரன், “ஐயா! புது வெண்ணெய் பாருங்கள்; பனிக்கட்டியைப்போல் குளிர்ந்திருக்கின்றது” என்றான். லோபி, “அப்பா! இவன்

சொல்வதிலிருந்து வெண்ணெயைவிடப் பனிக்கட்டி உயர்ந்ததென்று தெரிகின்றது. ஆதலால், அந்தக் கடைக்குப் போகலாம் வா" என்று சொல்லிப் பிச்சைக்காரனை அந்தக் கடைக்கு அழைத்துப் போய், "பனிக்கட்டி (ஐஸ்) இருக்கின்றதா?" என்று கேட்டான். கடைக்காரன் "ஐயா! நல்ல பனிக்கட்டி இருக்கிறது. தண்ணீரைப்போல் நன்றாகத் தெளிந்திருக்கின்றது சரக்கைப் பார்த்து வாங்குங்கள்" என்றான்.

லோபி பிச்சைக்காரனைப் பார்த்து, "அப்பா! கேட்டாயா! இவன் சொல்வதிலிருந்து தண்ணீர் உயர்ந்தது என்று தெளிவாகத் தெரிகின்றது இனி வீட்டுக்குப் போகலாம் வா" என்று வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய், தண்ணீரைக் கொடுத்து, நல்ல தண்ணீர் குடித்துப் பசியாறுவாய் என்றான். பிச்சைக்காரன், "என்ன ஐயா! ஊரையெல்லாம் சுற்றி அடித்துவிட்டுத் தண்ணீரைத் தருகின்றீர்? இந்தத் தண்ணீர் குளத்தில் கிடைக்கமாட்டாதா?" என்று சலித்துக் கூறினான்.

அந்தப் பரமலோபி வெகு சாந்தமாக "அப்பா! கோபிக்காதே நீ சொல்வதும் சரிதான். இது நேற்றுக் கொணர்ந்த தண்ணீர், சுத்தமான தண்ணீர் குளத்திலிருந்தே வேண்டுமளவும் குடிக்கலாம். ஐயோ! பாவம் நீ என்ன செய்வாய். உனக்கு மெத்தப் பசி. இந்தத் தெருக்கோடியில்தான் குளமும் இருக்கின்றது. தாமதஞ் செய்யாமல் இந்த வழியே போய் குளத்திலே தண்ணீரைக் குடித்துவிட்டு அங்கேயே நிழலுமிருக்கின்றது படுத்துத் தூங்கிச் சுகிக்கலாம். இதுதான் குளத்திற்கு நேர் பாதை போய் வா" என்று வாழைப்பழம்போல் இனிமையாகப் பேசி அனுப்பினான். பிச்சைக்காரன் வயிறு எவ்வாறு எரிந்திருக்கும் என்பதை எழுதவேண்டுமா?

இத்தகைய லோபிகள் இருப்பது நிலத்துக்குச் சுமைதான்.

"தம்மை, யண்டினர்க்கொன்று ஈயார் இருந்தென்ன
போயென்ன காண்கச்சி யேகம்பனே."

நன்றி: சிறுவர் கதைகள்
திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

## சைவ சமய அறிவு

1. சனாதனம், வைதிகம் எனறழைக்கபடும் சமயமெது? இந்துசமயம்

2. ''வேதமோடாகம் மெய்யாம் இறைவன் நூல்'' என்று கூறியவர்யார்?
திருமூலர்

3. வேதங்களை அருளிச் செய்தவர் யார்? இறைவன் (சிவன்)

4. தேதங்களை நான்காக வகுத்தவர் யார் வேதவியாசர்

5. இருக்குவேத பிராமணங்கள் 2 தருக ஐதரேயம், கெஷீதகீயம்

6. ''மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானு மரனெனத் தொழுமே'' என்று வரும் நுலெது? சிவஞானபோதம்

7. ''காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீணாகம்
அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்'' எனப்பாடியவர் யார் சேக்கிழார்
சுவாமிகள்

8. சிவனடியார்களை வழிபட்டு வீட்டின்பம் அடைந்த ஐவர் பெயர் தருக?

1. திருநீலகண்டர் 2. இயற்பகையார் 3. சிவத்தொண்டர்
4. திருக்குறிப்புத்தொண்டர் 5. விறன்மிண்டர்

9. அப்பர்-சரியைநெறி தாசமார்கம்-சலோகமூர்த்தி சம்பந்தர்-கிரியைநெறி
சற்புத்திரமார்க்கம்-சாமீபமூர்த்தி சுந்தரர்-யோகநெறி சகமார்கம்-சாரூப மூர்த்தி
மாணிக்கவாசகர்-ஞானநெறி சன்மார்க்கம்-சாயுச்சியமுத்தி

10. பஞ்சபூதத்தலங்களெவை?
   1. நிலம்(மண்) - திருவாரூர் அல்லது காஞ்சிபுரம்
   2. நீர் - திருவானைக்கா
   3. தேயு - திருவண்ணாமலை
   4. வாயு - திருக்காளத்தி
   5. ஆகாயம் - சிதம்பரம்

11. ''சிவனொடொக்கும் தெய்வம் தேடினுமில்லை'' என்ற தொடர் என்நூலிடம் பெறுகிறது?
திருமந்திரத்தில்

12. அட்டசீலங்களுமெவை? 1. நல்லறிவு 2. நல்லநினைவு 3. நற்பேச்சு 4. நற்செயல்
6. நல்வாழ்வு 6. நன்முயற்சி 7. நல்விழிப்பு 8. நல்லொருமை

13. திருக்கோயிலை காலை, பகல், மாலையில் வணங்கினால் முறையே நோய்
நீங்கும்,

வேண்டியவற்றை பெறலாம், எல்லாபாவத்தையும் நீக்கும்.

14. திருச்சந்தவிருத்தம் பாடியவர் யார்? திருமழிசை ஆழ்வார்

15. கணபதிக்குரிய நான்கு சக்திகள் யார்? வல்லபை, நீலசரஸ்வதி, சத்தி, புத்தி

16. விநாயகரின் பாசம் ஏந்திகை - படைத்தலை குறிக்கும்
விநாயகரின் தந்தம் - காத்தலை குறிக்கும்
விநாயகரின் அங்குசம் - அழித்தலைக் குறிக்கும்
விநாயகரின் மோதகம் - அருளல் தொழிலை குறிக்கும்
விநாயகரின் தும்பிக்கை - மறைத் தலைக் குறிக்கும்

17. நவதானியங்கள் எவை? உழுந்து, எள், கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல், பயறு

18. அஷ்டமாதாக்கள் பிராஹ்மி, மகேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராஹி, மாஹேந்திரி, சாமுண்டி, மகாலஷ்சுமி

19. இரகசியங்கள் திரிபுரரகசியம், சிதம்பரரகசியம், வரிவஸ்யாரகசியம்

20. ஆறுவிதமான கவலைகள்? பசி, தாகம், சோகம், மோகம், மூப்பு, மரணம்,

21. மூகாம்பிகை சந்நிதி எங்குள்ளது? திருவிடைமருதூர்

22. அன்னையின் ஒரு காதில் ஶ்ரீ சக்கரமும் மறுகாதில் சிவசக்கரமும் தோடுகளாக அமைந்துள்ள. எத்தலத்தில் அம்மனின் திருக்கோலம் அது? திருவானைக்கா அகிலாண்ணடேஸ்வரி


23. வேத, சிவாகம, திருமுறை, மெய்கண்டநூல் ஆகியவற்றின் தொடர்பைவிளக்கக் கூறிய உவமையாது? வேதம் - பசு சிவாகமம் - பால் திருமுறை - நெய்
மெயகண்டநூல் - சுவை

---------- சுபம் ------------

SAN MARGA IRAIVAN TEMPLE

# STONE BY STONE

The beginning of a pilgrimage to a Hindu sanctuary in paradise



Goddess Rajarajeshwari, Who presides over the Iraivan Carving Site in Bangalore.

**Someday, in this lifetime or another, you will make a pilgrimage to the Hawaiian archipelago, to the lush tropical island of Kaua'i, to Iraivan, a temple being crafted to last a thousand years. "Temple Builders" of nearly 50 nations have already contributed to this unique conception, and ask that you make a pledge to help see it become reality.**

**The Carving Team**

This one stone will take over 11 months to complete. There are 4,000 in all!



In the way of Hindu tradition, Iraivan began with a vision. Lord Siva made an ethereal appearance before Satguru Sivaya Subramunyaswami, at Gurudeva's ashram on Kaua'i. Gurudeva resolved to capture the immense spiritual power of that vision. Thus was born the Iraivan Temple.



**Rare and Priceless**

A 32-inch diameter bell, like the one above, and supporting chain will be carved out of the same giant stone, so they are totally connected. The bell rings eloquently.

Iraivan, "He who is worshipful," is one of the oldest words for God in the ancient Tamil language. From its beginnings in 1975, the temple was conceived to be as rare as the vision that birthed it. And today, as engineers prepare to pour a monolithic three-foot-thick concrete foundation, the vision is taking shape. By approximately 2010, Iraivan artisans will have hand-carved a white granite edifice of breathtaking beauty, shipped it stone-by-stone from India, and erected it in an earthly paradise.

In the beginning, $400,000 (US) was raised for the purchase of land and the building of access roads, including a path to the stone on which Siva sat during the vision. Rudraksha forest trees and fruit orchards were planted on the grounds, already held sacred by the ancient Hawaiians. Architectural plans from India, including sandalwood models, brought the project closer to substance.

In 1987, an extraordinary 700 pound crystal Sivalingam arrived, to become the focal point of the sanctum sanctorum. As time progressed, site preparation along the Wailua River created a lush botanical garden. A $230,000 compacted gravel foundation base was completed. People began to grasp the enormity of the project. A new $16 million



**Manifesting the Vision**

Rajeswari Nagaratnam, her husband and family sponsored the ornate *gomugai* carving for $15,000 (U.S.).



## Experience Heaven On Earth

An Agamic Siva temple is mystically designed to connect the Divine and the material, the spirit and the body, Heaven and Earth. Its every detail aspires to bring the soul closer to God within.

(US) fund-raising drive was launched. Each $5 contribution pays for one pound of finished granite. A total of 3.2 million pounds of stone must be finished.

In India, 70 artisans have been working full time throughout this decade, carving on blocks quarried from the mountains of Bangalore. The first shipment of 43 finished stones is now on display in a special gallery on Kaua'i, opened in 1998. In the next decade, the balance of 4,000 stones are scheduled to arrive at the Iraivan site, along with Indian master craftsmen who will fit and assemble the monument and sculpt its final details. We hope you will choose to be a Temple Builder through a sponsorship, pledge or simple gift of love. The path to completion is long and costly, but the future rewards of Iraivan's spiritual sanctuary are incalculable.



## Preserving the Past

Twin time capsules will be installed in the foundation of Iraivan, one high-tech, argon-gas, stainless steel canister and another old-style rock crypt holding sand and large etched copper plates.



## Monthly Pledges

This is the most common form of giving money to support Iraivan. Many set-up automatic monthly payments to be made from credit cards or bank accounts.

## What the Future Holds


Viewed from the front, this artist's rendering looks up from the banks of the sacred Wailua River.





## Sponsor Unique Artifacts

This elaborate carving of the *gomukai* was the first temple artifact to be sponsored.



# Build the Temple, Stone By Stone

Give generously and become an integral part of this unique vision. Contact us through any of the following channels and find out how you can become a temple builder.

San Marga Iraivan Temple
Kauai's Hindu Monastery
107 Kaholalele Road
Kapaa, Hawaii 96746-9304
Phone: 808-822-3012, x 237
Fax: 808-822-4351
www.hindu.org/ka
e-mail: thondu@hindu.org



Red is amount raised so far